# கோயம்புத்தூர் மாநகராட்சி
# சொத்து வரி திருத்தம்
## அறிக்கை

அரசாணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 19-07-2018 மற்றும் அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 27-07-2018-ன்படி, கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 அட்டவணை 4-ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சி சொத்துவரியினை 01-04-2018 முதல் மாற்றியமைக்க திட்டமிட்டுள்ளது. இந்த மதிப்பீடு சொத்து உரிமையாளர்/குடியிருப்போர்/ குத்தகைதாரர் சமர்ப்பிக்கும் சொத்து வரி சுய மதிப்பீட்டு விவர அறிக்கையில் உள்ள விவரங்களை அடிப்படையாகக் கொண்டு இருக்கும்.

மேற்படி அரசாணைகளின்படி, சொத்துவரி சீராய்வு செய்யும் பணி தொடங்கப்படவுள்ளதால், கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள சொத்துக்களின் உரிமையாளர்கள் / குடியிருப்போர் / குத்தகைதாரர்கள், அவர்கள் வசமுள்ள சொத்துக்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய சொத்து வரி சுய மதிப்பீட்டு விவர அறிக்கையினை 24-11-2018 தேதிக்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

குறிப்பிட்ட தேதிக்குள் சொத்து வரி சுய மதிப்பீட்டு விவர அறிக்கை தாக்கல் செய்யாத மதிப்பீட்டாளர்களின் சொத்துக்கள் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களால் மதிப்பீடு செய்யப்பட்டு, உத்தரவளிக்கப்பட்டு, அதனடிப்படையில் சொத்துவரி மறு மதிப்பீடு செய்யப்படும்.

சொத்து வரி சுய மதிப்பீட்டு விவர அறிக்கையில் தாக்கல் செய்துள்ள விவரங்களில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின், வேறுபாடுகள் தொடர்பாக ஆணையாளரால் சொத்து உரிமையாளருக்கு தகுந்த வாய்ப்புகள் வழங்கப்பட்டு, சொத்து உரிமையாளர்களிடம் கட்டிட பரப்பளவு, கட்டிடம் கட்டிமுடிக்கப்பட்ட ஆண்டு மற்றும் உபயோகம் குறித்து ஆட்சேபனை கோரப்பட்டு அதனடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்ட காலத்திலிருந்து மறு மதிப்பீடு செய்யப்பட்டு, சொத்து வரி கேட்பு முடிவு செய்யப்படும் என அறிவிப்பு செய்யப்படுகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சொத்து உரிமையாளர்கள் கீழ்க்கண்ட முறைகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் சொத்து வரி சுய மதிப்பீடு தொடர்பான அறிக்கையினை சமர்ப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1. சொத்து வரி சுய மதிப்பீடு அறிக்கைக்கான படிவத்தினை மாநகராட்சி அலுவலகம் / மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் நேரடியாக பெற்று பூர்த்தி செய்து நேரடியாக சமர்ப்பிக்கலாம்.

2. சொத்து வரி சுய மதிப்பீடு அறிக்கை படிவத்தினை கோயம்புத்தூர் மாநகராட்சி இணையதள முகவரி **www.ccmc.gov.in** மூலமாக பதிவிறக்கம் செய்து, அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது இணையவழி (on-line) மூலமும் பதிவேற்றம் செய்யலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட சொத்து வரி சுய மதிப்பீட்டு அறிக்கையை மாநகராட்சி ஆணையர் கோயம்புத்தூர் மாநகராட்சி என்ற முகவரியிட்டு நேரிடையாகவோ அல்லது தபால் மூலமோ அல்லது இணையவழி (on-line) மூலமும் 24-10-2018 முதல் 24-11-2018 க்குள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

இப்பணியில் சொத்துவரியேற்புக்குறியவர்கள் மாநகராட்சிக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஆணையாளர்/தனிஅலுவலர்.**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**